2023 மே மாதம் 02– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 790 /2015*

*2023 –ம் ஆண்டு மே மாதம் 02 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 3, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. S.மகாலட்சுமி,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 3, ரேவதி |
| தகப்பனார் பெயர் | : | ராமன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | உதவி மேலாளர் |
| வயது | : | 47 |

தேதி: 02.05.2023.

<u>முதல் விசாரணை :–</u>

நான் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிகின்றேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எங்கள் நிறுவனம் சார்பாக சிறப்பு மாவட்ட நீதிமன்றம், திருச்சி MCOP.No.1798/2014 என்ற எண்ணில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நகல் **எ.சா.ஆ.7,** 1–ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நகல் **எ.சா.ஆ.8** ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகின்றேன்.

<u>குறுக்கு விசாரணை:– (மனுதாரர் தரப்பில்)</u>

இந்த வழக்கு விபத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இரு வாகனங்களுக்கும் முன் பகுதியில் தான் சேதம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் மீது முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்யப்பட்டு அவர் குற்றவாளி என்று பதிவு செய்யப்பட்டிருந்தால் தான் நாங்கள் இழப்பீடு தரமுடியாது என்பது எங்கள் தரப்பு வாதம் என்றால் சரிதான். மனுதாரர் மீது தான் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரை குற்றவாளிஅல்ல என்று நீதிமன்றம் விடுதலை செய்து விட்டால் நஷ்டஈடு கொடுப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை உள்ளது. என்ன சட்டப்பிரிவின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் சாட்சியங்கள் மூலம் வாக்குமூலம் தேவைப்பட்டாலும், ஆவணங்கள் தேவைப்பட்டாலும் எங்கள் தரப்பில் ஒரு புலன் விசாரணை அதிகாரியை நியமிப்போம். இந்த வழக்கில் அது போல் புலன் விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுள்ளோம் என்றால் சரி. அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் விளக்கம் சொல்லவில்லை என்றால் சரி. புலனாய்வு அதிகாரி தாக்கல் செய்யும் அறிக்கை எங்கள் அலுவலகத்தில் மட்டும் தான் இருக்கும். எங்கள் புலனாய்வு அதிகாரி முறையாக விசாரணை செய்து இந்த விபத்திற்கு மனுதாரர் காரணம் அல்ல என்று அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர் எந்த தேதியில் அறிக்கை வழங்கினார் என்றால் அதை கோப்பை பார்த்தால் தான் கூறமுடியும். மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட விபத்து வழக்கு STC No. 370/2015–ல் திருச்சி, தலைமைக்குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று 02.12.2019 அன்று மனுதாரர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்பு நகல் **ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புலனாய்வு அறிக்கையை எங்களது தரப்பு வாதத்திற்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்து பின்னிட்டு தாக்கல் செய்து கொள்ளலாம் என்பதற்காக தான் எனது பிரமாண வாக்குமூலத்துடன் புலனாய்வு அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு 1–ம்

எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. எங்களது நிறுவனத்தை பொறுத்தவரை மனுதாரர் 3–ம் தரப்பினர் என்றால் சரி. 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இருந்ததால் மனுதாரருக்கு நாங்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் மீதான விபத்து வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எ.சா.ஆ.7 தீர்ப்புரை இந்த நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நாங்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:– (1–வது எதிர்மனுதாரர் தரப்பில்)**

**குறுக்கு விசாரணை இல்லை.**

**ஒப்பம்/– எம். மூர்த்தி,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**